## 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை ஆயுர்வேத மருந்துப்பொருள் கூட்டுத்தாபனத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பராயமொன்றை தெரிவிக்கவில்லை. எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

## 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது

கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 நிதிக்கூற்றுக்கள்**

**1.5.1 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் மீதான உள்ளகக் கட்டுப்பாடு**

| உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுப் பெறுமதி ரூபா 436.44 மில்லியன் தொகைக்கான 1,478 நாட்குறிப்புப் பதிவுகளின் மூலம் மீளாய்வாண்டின் போது கணக்குகளிடையே சீராக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், ரூபா 306.31 மில்லியன் தொகைக்கான 1,370 நாட்குறிப்பு பதிவுகள் மற்றும் அதற்குரிய நாட்குறிப்பு உறுதிச் சீட்டுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அக் கணக்குகளிடையே மேற்கொள்ளப்பட்டிருந்த சீராக்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது. | 2020 ஆண்டிற்கான கணக்குக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கும் போது உரிய துணை அறிக்கைகள் உரிய முறையில் சமர்ப்பிப்பதற்கு இணங்குகின்றேன் என. | கணக்களிப் பொறுப்பினை உறுதிப்படுத்தக்கூடிய விதமாக உள்ளகக் கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமைகள் நிறுவப்பட வேண்டும். |

**1.5.2 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை**

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்வந்து முன்செல்லல் அல்லது பச்சை சராசரிக் கிரயத்தை அடிப்படையாகக் கொண்டு இருப்புக்களின் கிரயம் கணிக்கப்பட்டிருக்காமை, இருப்புக்கள் பற்றாக்குறை மற்றும் மிகைகளை கவனத்தில் எடுக்காமல் மற்றும் கிரயம் அல்லது நிகர் தேறிய பெறுமதி ஆகிய இரண்டில் மிகவும் குறைந்த பெறுமதியில் இறுதி இருப்புக் கணிப்பீட்டில் பெறுமதியினை கணித்திருக்காமை ஆகிய விடயங்கள் காரணங்களினால் நிதிக்கூற்றுக்களில் கிரயம் ரூபா 98.68 மில்லியன் தொகை என காட்டப்பட்டிருந்த இருப்புக்களின் பெறுமதி இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இன் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களில் இனங்கண்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. அதேபோல் மேற்கூறிய இருப்புப் பெறுமதியில் உள்ளடங்கியுள்ள ரூபா 4.50 மில்லியனிற்கான சேதமடைந்த இருப்பொன்றிற்காக ரூபா 3 மில்லியன் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்த | FIFO முறைமையின் கீழ் இருப்புக்கள் பேணப்படுவதற்கு விற்பனை நிலையங்களில் கணினி மென்பொருள் வசதிகள் காணப்படாமை என 2020 கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்படும் என, கூட்டுத்தாபனம் நிகர தேறிய பெறுமதிக்கு விற்பனை மேற்கொள்ளப்படுவதில்லை என மற்றும் அனைத்து மருந்து வகைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன என, தனியார் துறைக்கு கழிவு வழங்கப்பட்ட போதிலும் அவை கிரயத்தை விட குறைந்த பெறுமதி ஒன்று அல்ல என, மேற்கூறிய காரணங்கள் மீது திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அனைத்து மருந்து வகைகளும் கிரயத்திற்கு பெறுமதி கணிக்கப்பட்டது என. | நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், இந்த பிழைகளை சரி செய்து 2020 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அவ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட அடிப்படை மற்றும் அதன் விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்கூறிய இருப்புப் பெறுமதியில் உள்ளடங்கியிருக்காத 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 5.55 மில்லியன் கிரயத்திற்கான பயன்படுத்த முடியாத மருந்து வகை இருப்புக்களின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஆ) | நியமம் 8 இன் 42 பந்தியின் பிரகாரம், பொருண்மையான முன்னைய காலப்பகுதிக்கான பிழைகள் அவற்றை கண்டுபிடித்த பின்னர் விற்பனைக்காக அங்கீகரிக்கப்படும் முதலாவது நிதிக்கூற்றுக்களில் பிழை ஏற்பட்டிருந்த காலப் பகுதிக்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒப்பீட்டுப் பெறுமதிகள் மீண்டும் புனரமைத்தலின் மூலம் கடந்த காலத்திற்கு பொருத்தமாக சரி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்படாமல் முன்னைய ஆண்டுகளுக்கான பிழைகளை சரி செய்யல் ரூபா 22.07 மில்லியன் தொகை முன்கொண்டு வரப்பட்டிருந்த திரண்ட இலாப மீதியுடன் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | 2020 ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும் என. | நியமத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், இந்த பிழைகளை சரி செய்து 2020 ஆண்டில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | நியமம் 16 பந்தி 79(ஆ) பிரகாரம், கிரயம் ரூபா 3.25 மில்லியன் தொகை மற்றும் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டு பயன்படுத்தப்படும் 05 வாகனங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த 05 வாகனங்களின் ஏட்டுப் பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது என, இந்த 05 வாகனங்களை மாத்திரம் மீள்மதிப்பீடு செய்யப்படின், மேலதிக செலவொன்று மேற்கொள்ள நேரிடும் என மற்றும் அடுத்த ஆண்டில் மீள்மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட சீராக்கல் மேற்கொள்ளப்படும் என. | -மேற்படி- |

**1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 04 விற்பனை நிலையங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த கடன் விற்பனை ரூபா 3.31 மில்லியன் தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. இதன் காரணமாக ஆண்டிற்கான மொத்த இலாபம் அப்பெறுமதியினால் நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | விற்பனை இன்வொயிஸ்களை அடிப்படையாகக் கொண்டு கணக்குப் பிரிவில் கணக்குகள் நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது என. | இந்த பிழையை சரி செய்து 2020 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மீளாய்வாண்டிற்கான வருமான வரிப் பொறுப்புக்கள் ரூபா 820,104 தொகையினால் நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | இதனை 2020 நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும் என. | -மேற்படி- |
| (இ) | மீளாய்வாண்டிற்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் செலவு, ஊழியர் சேமலாப நிதிச் செலவு, வட்டி வருமானம் மற்றும் பொதி செய்தல் பொருட்களுக்கான செலவுகள் கணக்கீடு செய்யப்படாமை வழுவின் காரணத்தினால் மீளாய்வாண்டிற்கான இலாபம் ரூபா 2.18 மில்லியன் தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது தனதாக்கியிருந்த இரண்டு இயந்திரங்களின் கிரயமாகிய ரூபா 13.44 மில்லியன் தொகை குறிப்பிட்ட சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும் என. | இந்த பிழையை சரி செய்ய 2020 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2010 ஆண்டு முதல் 2013 ஆண்டு வரையான காலப்பகுதிக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு மற்றும் மிகை விதிப்பு என மீளாய்வாண்டின் போது செலுத்தியிருந்த ரூபா 1.87 மில்லியன் தொகையில் ரூபா 1.49 மில்லியன் தொகை மாத்திரம் குறிப்பிட்ட செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு மீதியாகிய ரூபா 376,360 ற்கான தொகை அட்டுருச் செலவுக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அட்டுருச் செலவுக் கணக்கின் மீதி அப் பெறுமதியினால் நிதிக்கூற்றுக்களில் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது உற்பத்தியகத்தின் கூரை திருத்த வேலைக்காக திறைசேரி ஏற்பாடுகளின் மூலம் செலவளிக்கப்பட்டிருந்த ரூபா 1.59 மில்லியனிற்கு உரிய ரூபா 54,892 ற்கான கிரமமான பெறுமானத் தேய்வு கழிக்கும் கணக்கிற்கு கணக்கீடு செய்திருக்கவில்லை. மேலும், நிர்மாண வேலைகள் மற்றும் புனர்நிர்மாணத்திற்காக மற்றும் தேயிலை பொதி செய்யும் இயந்திரம் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | கொள்வனவு செய்வதற்காக திறைசேரி ஏற்பாடுகளில் இருந்து செலவிடப்பட்டிருந்த மொத்தத் தொகை ரூபா 30.41 மில்லியனிற்காக 2015 ஆண்டு முதல் 2018 ஆண்டு வரையான காலப் பகுதிக்கான கிரயமான பெறுமானத்தை ரூபா 5.06 மில்லியன் தொகையினால் குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (எ) | 2018 ஆண்டின் போது கூட்டுத்தாபன வளவில் கற்கள் பதிப்பதற்காக மற்றும் வடிகால் முறைமை நிர்மாண வேலை என்பவற்றிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 6.62 மில்லியன் தொகையில் ரூபா 2.79 மில்லியன் தொகை குறைவாக மூலதனப்படுத்தியிருந்த பிழையினை மீளாய்வாண்டின் போது சரி செய்வதற்காக ரூபா 1.35 மில்லியன் தொகை பொது முற்பணக் கணக்கிற்கு செலவு வைப்பதற்கு பதிலாக திரட்டிய நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஏ) | 2018 செப்தம்பர் 13 திகதியளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த நிர்மாண வேலை ஒன்றிற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 2.79 மில்லியன் தொகையினை மூலதனப் படுத்தாமல் நடைபெறு வேலை என காட்டப்பட்டிருந்த தவறு மற்றும் வேறொரு நிர்மாண வேலைக்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1.41 மில்லியன் தொகையினை மூலதனப்படுத்தாமல் வருவாய் செலவு என கணித்து கணக்கீடு செய்திருந்த தவறினை மீளாய்வாண்டின் போதும் சரி செய்திருக்கவில்லை. | 2020 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் சரி செய்யப்படும் என. | இந்த பிழையினை சரி செய்து 2020 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரித்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 05 விடயங்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி மற்றும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த அட்டவணைகள் மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகளின் படி பெறுமதிகளிடையே ரூபா 23.15 மில்லியனிற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்ட போதிலும் வித்தியாசத்திற்கான காரணம் விளக்கப்படவில்லை. | கடன் விற்பனை மற்றும் வட்டி வருமானம் கணக்கீடு செய்யப்படாமை மற்றும் கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வு அறிக்கை பிழைகளுடன் காணப்பட்டமையால் வித்தியாசங்கள் காணப்படுகின்றன என. | நேரொத்த அறிக்கைகளுடன் இணக்கஞ் செய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 146.71 மில்லியனிற்கான 17 கடன்பட்டோர் மீதிகள் மற்றும் ரூபா 41.32 மில்லியனிற்கான 62 கடன்கொடுத்தோர் மீதிகளுக்கான மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்களும் 04 விடயங்களின் கீழ் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்த ரூபா 15.96 மில்லியன் தொகைக்கான பதிவழிப்புக்கு உரிய மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அவ் விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்வதற்கு அல்லது சான்றுறுதி செய்வதற்கு முடியாமல் இருந்தது. | கடன்பட்டோர் 52 பேர் மற்றும் கடன்கொடுத்தோர் 38 பேருக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை அனுப்பப்பட்ட போதிலும் கடன்பட்டோர் 10 பேரும் கடன்கொடுத்தோர் 03 பேரும் மாத்திரம் மீதிகளை உறுதிப்படுத்தல்கள் அனுப்பியிருந்தனர் என, கணக்கு எவற்றின் மீதிகளும் பதிவழிக்கப்பட்டிருக்காததுடன் முன்னைய ஆண்டுகளுக்கான பிழைகள் சரி செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது என. | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு பேணப்படக்கூடிய விதமாக கணக்கீட்டு முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டியதுடன், மீதிகளை உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளல் மற்றும் மீதிகள் உறுதிப்படுத்தப்படாத கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட்டு அடையாளத்தை உறுதிப்படுத்தப்பட வேண்டும். பிழைகளை சரி செய்தல் தொடர்பான மூல ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 203.55 மில்லியனிற்கான மொத்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 2.49 மில்லியன் தொகைக்கான 05 வருடங்களை விட மிகையான காலம் முதல் 13 பொதுத்துறை நிறுவனங்களிலிடமிருந்து அறவீடுகள் நிலுவையாக காணப்பட்ட கடன்மீதிகளாக இருந்ததுடன், அவற்றில் மீளாய்வாண்டின் போது பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. அந்த 13 பொதுத்துறை நிறுவனங்களில் ஆயுர்வேத திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டிய தொகை என | ஆயுர்வேத திணைக்களத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ஒன்றும் காணப்படவில்லை என அத் திணைக்களத்தினால் அறிவித்திருந்த போதிலும், அது சரியான பதில் ஒன்றாக இருக்காமையால் பணம் செலுத்தும் படி 2019 திசெம்பர் 05 திகதி மீண்டும் கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது. | கடன் அறவீடுகள் வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்காக பொருத்தமான மற்றும் முறையான செய்முறை ஒன்று அறிமுகப்படுத்தி செயற்படுத்த வேண்டும். |

ரூபா 1.25 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்திற்கு செலுத்துவதற்கு மீதி ஒன்றும் காணப்படவில்லை என திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 48.41 மில்லியனிற்கான மொத்த கடன்கொடுத்தோர் மீதியில் காணப்பட்ட 41 கடன்கொடுத்தோர் மீதிகள் தொடர்பாக ரூபா 38.06 மில்லியனிற்கான கடன் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், தாமத காலம் 431 நாட்களை மிகைத்திருந்தது. | முறையான அங்கீகாரம் இன்றி கொள்வனவு செய்திருந்தமையாலும், பண்டங்களின் பண்புசார் தன்மைகள் தொடர்பாக சிக்கல்கள் காணப்பட்டமையாலும் உரிய தர அறிக்கைகள் வழங்கியிருக்காமையாலும் சில கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | கணக்கீடு செய்யக்கூடிய கடன்கொடுத்தோர் மாத்திரம் கணக்கீடு செய்யப்படகூடிய விதமாக மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு அத்தியவசிய வழங்கல்களை பண்புசார் விதமாக பெற்றுக்கொள்ளக்கூடிய விதமாக, கடன்கொடுத்தோர் தொடர்பாக முறையான உள்ளகக் கட்டுப்பாடுச் செய்முறை ஒன்று அறிமுகப்படுத்தி குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் கடன்கொடுத்தோருக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்கு செயற்பட வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர் | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணங்கள் 102, 103, 104, 105 மற்றும் 2016 பெப்ரவரி 12 திகதிய 02/2016 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கையின் மூலம் திருத்தப்பட்டிருந்த நிதிப் பிரமாணம் 108 | 2007 ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 திகதி வரை அவ்வவ் ஆண்டுகளின் போது இனங்காணப்பட்டிருந்த ரூபா 19.88 மில்லியன் தொகைக்கான இருப்பு மிகைகளை ஏடுகளுக்கு எடுப்பதற்கு மற்றும் அவ்வவ் ஆண்டுகளில் இனங்காணப்பட்டிருந்த ரூபா 18.61 மில்லியன் | குறிப்பிட்ட பிரிவின் மூலம் இருப்புப் பற்றாக்குறை மற்றும் மிகைகள் அறிக்கை தயாரிக்கப்பட்டு மனிதவள பிரிவுக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது என, மனிதவள பிரிவினால் குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு இருப்பு பற்றாக்குறை மற்றும் | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் சேதங்களுக்கு மற்றும் பற்றாக்குறைகளுக்கு அடிப்படையான காரணங்கள் மற்றும் பொறுப்புச் சொல்ல |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகைக்கான இருப்பு பற்றாக்குறை மற்றும் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4.50 மில்லியன் தொகைக்கான சேதமடைந்த இருப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு பணிப்பாளர் சபைக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைகள் தொடர்பாக வேறாக அறிக்கை ஒன்று பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது என மற்றும் அந்த அறிக்கையின் அடிப்படையில் பணிப்பாளர் சபையினால் வழங்கப்படும் பரிந்துரைகள் மீது குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற் கொள்ளப்பட்டன என | வேண்டியவர்களை இனங் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நட்டத்தை அறவீடு செய்வதற்கு அல்லது ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு உரியவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 395(இ) | மாதாந்த வங்கி இணக்கக் கூற்று தொடர்ந்து வரும் மாதத்தின் 15 திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஒரு நடைமுறைக் கணக்கு தொடர்பாக வங்கி இணக்கக் கூற்று 2019 ஏப்ரல் மாதம் வரை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | நாவின்ன விற்பனை நிலையத்திற்கு காட்களின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்வதற்கு வசதிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்கான பற்றுச்சீட்டுக்கள் தாமதமாக கணக்குப் பிரிவுக்கு சமர்ப்பிக்கப்படுவதன் காரணமாக வங்கி இணக்கக் கூற்று தயாரித்தல் தாமதமாகியது என. | வங்கி இணக்கக் கூற்றுக்கள் குறிப்பிட்ட திகதியில் தயாரிக்கக் கூடிய விதமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையினை முறைப்படுத்தப் பட வேண்டும். |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கங் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கை | நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவன அமைப்புக் கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட ஆளணி, தற்போது காணப்படும் பதவியணியினர் தொடர்பான விபரங்கள், வருடாந்த பாதீட்டை அடிப்படையாக கொண்ட முக்கியத்துவ அடிப்படை மீது தயாரிக்கப்பட்ட வருடாந்த செயற்பாடுகள் திட்டம் (Activity Plan) செயற்படுத்தும் கால சட்டகம் அச் செயற்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கும் | 2019 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் என மூலதனத் திட்டம் தயாரிக்கப்பட்டது என, மற்றும் செயற்பாடுகள் திட்டம் (Activity Plan) அடுத்த வருடம் முதல் தயாரிக்கப்படும் என. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் குறிப்பிட்ட கால சட்டகத்தில் முறைசார் விதமாக தயாரிக்கப்பட வேண்டியதுடன், செயல் நடவடிக்கைத் திட்டத்திற்கு நேரொத்ததாக முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வெளியீடு/ விளைவுகள் ஆகிய விபரங்களை உட்படுத்தி வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 1994 ஜூன் 14 திகதிய 95 இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் விதிமுறைகளுக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி செலுத்தியிருந்த மொத்த ஊக்குவிப்பு கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 432.12 மில்லியன் தொகையாகும். | உற்பத்தி நிறுவனம் ஒன்றின் நாளாந்த, மாதாந்த மற்றும் வருடாந்த இலக்குகளை அடைவதற்காக ஊழியர்களின் வரவு கூடிய மட்டத்தில் காணப்பட வேண்டும் என, ஆக்கபூர்வத்தன்மை உச்ச மட்டத்தில் பேணுவதற்காக காலத்திற்கு ஏற்றவாறு பொருத்தமான உபாயங்களை செயற்படுத்த வேண்டும் என, திறைசேரியின் அங்கீகாரத்தை பெறும் வரை பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் மீது தற்போது வழங்கப்படும். ஊக்குவிப்பு கொடுப்பனவு செய்முறையை நிறுத்தினால் அது குறிக்கோள் மற்றும் இலக்குகளை நெருங்குவதற்கு தடையாக அமையும் எனவும் அதன் மூலம் செயற்பாட்டு நட்டமொன்று பெறுவதற்கான வசதிகளை கவனம் செலுத்தாமல் விட முடியாது எனவும், மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்தும் செய்முறை | அனைத்து பிரிவுகளைச் சேர்ந்த உத்தியோகத்தர் களின் செயலாற்றல் மட்டத்தை உயர்த்தக்கூடிய விதமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு முறை தயாரிக்கப்பட்டு முறையான அங்கீகாரத்தை பெற்றுக்கொண்ட பின்னர் மாத்திரம் ஊக்குவிப்பு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். முறையான அங்கீகாரம் ஒன்ற இன்றி மற்றும் சட்டரீதி அல்லாத ஊக்குவிப்பு கொடுப்பனவு செலுத்துவதற்கா ன அதிகாரம் மற்றும் அங்கீகாரம் வழங்கப்படும் மற்றும் சான்றுபடுத்தல் மேற்கொள்ளப்படு ம் உத்தியோகத்தர் கள் மிகை விதிப்புக்கு உட்படுத்தப்படுவ ார்கள் என |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | மீதியான மருத்துவ விடுமுறைகளுக்கான கொடுப்பனவை அங்கீகரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்கள் 4.2.1 மற்றும் 4.2.2 | குறைந்தளவு 3 வருட காலத்துக்கு எதிர்பார்க்கும் பெறுகை அலுவல்கள் அட்டவணை தயாரிக்கப்பட்டு பிரதான பெறுகைத் திட்டமும் ஒவ்வொரு பெறுகை ஆரம்பம் முதல் இறுதி வரை ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் கட்டங்களும் கால வரையரைகளும் விவரிக்கக் கூடிய விதமாக பெறுகை கால அட்டவணை தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | அரச பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் கடந்த கணக்காய்வுக் குழு கூட்டங்களில் வழங்கப்பட்ட அறிவுறைகளின் படி பெறுகைத் திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக தற்போது திட்டமிடல் பிரிவு மற்றும் வழங்கல் பிரிவு மற்றும் விவசாய உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து செயற்பட்டு வருகின்றார்கள் என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களின் பிரகாரம், பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். |

**1.8 தகவல் தொழில்நுட்பம் (IT) பொதுக் கட்டுப்பாட்டு முறை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கூட்டுத்தாபனத்தினால் பயன்படுத்தப்படும் கணினி முறைமைக்கு கூட்டுத்தாபனத்தின் பல்வேறு பிரிவுகளில் இருந்து உள்ளிடப்படும் தரவுகளின் உண்மைத் தன்மையின் உறுதிப்படுத்துவதற்காக அவ்வவ் பிரிவுகளினால் முறையான உள்ளக கட்டுப்பாட்டு நடைமுறை ஒன்று நிறுவப்பட்டிருக்கவில்லை. 2011 ஆண்டு முதல் கடன் கொடுத்தோருக்கு மற்றும் அட்டுருச் செலவுகளுக்காக பணம் கொடுப்பனவு செய்யும் போது மற்றும் இலவசமாக கிடைக்கும் பச்சை மற்றும் உலர்ந்த மருந்து வகைகள் கலஞ்சிய இருப்புக்கு உட்படுத்தும் போது ஏற்பட்டிருந்த பிழைகளை சரி செய்வதற்காக மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 15.96 மில்லியன் பெறுமதிக்காக சீரக்கல் மேற்கொள்வதற்கு நேரிட்டிருந்தது. | கூட்டுத் தாபனத்தினால் தற்போது பயன்படுத்தப்படும் கணினி முறைமையின் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை உரிய முறையில் செயற்படுத்தப்படுகின்றது என, உள்ளீடு செய்யப்படுகின்ற தரவுகள் தனி நபர் ஒருவரின் விரும்பத்தின் படி மாற்றம் செய்ய முடியாது எனவும், கணினி முறைமைக்காக நிறுவப்பட்டிருக்கும் ஏதேனும் கட்டுப்பாட்டு முறை தேவைப்படின் அவற்றை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் எல்லாப் பிரிவுகளுடனும் தொடர்பு வைக்கக் கூடியவாறு புதிய கணினி முறைமை (ERP) நிறுவுவதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருகின்றன என. | தற்போது காணப்படும் கணினி முறைமைக்குள் கூட்டுத்தாபனத்தின் அனைத்து பிரிவுகளினால் உள்ளீடு செய்யப்படும் தரவுகளின் சரியான தன்மையை உறுதிப் படுத்திக்கொள்வதற்காக உள்ளகக் கட்டுப்பாட்டின் நடைமுறை ஒன்று கணினி முறைமைக்கு வெளியில் பொறுத்தப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 648,204 இற்கான இலாபம் ஒன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 23.07 மில்லியன் தொகை ஆகும். அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 22.43 மில்லியன் பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டிற்கான விற்பனவு வருமானம் ரூபா 29.75 மில்லியன் தொகையினால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனை கிரயம் ரூபா 61.19 மில்லியனினால் மற்றும் நிருவாகச் செலவுகள் ரூபா 6.06 மில்லியனினால் அதிகரித்திருத்தலும் ஏனைய வருமானங்கள் ரூபா 3.10 மில்லியன் தொகையினால் குறைவடைந்திருத்தலும் இருந்த பின்னடைவிற்கு முக்கிய காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் விற்பனை வருமானம் சுமார் 4 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன், விற்பனவுக் கிரயம் 14 சதவீத்தினால் அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி வருமானங்கள் 422 சதவீத்தினால் அதிகரித்திருந்ததுடன், ஏனைய வருமானங்கள் 44 சதவீதத்தினால் குறைவடைந்திருந்து.

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த இலாப விகிதாசாரம் மற்றும் தேரிய இலாப விகிதாசாரம் முறையே 6 சதவீதத்தினாலும் மற்றும் 3 சதவீதத்தினாலும் குறைவடைந்திருந்தன. எனினும், நடைமுறை விகிதாசராம் 0.44 இனால் மற்றும் விரைவுச் சொத்து வீதம் 0.48 இனாலும் அதிகரித்திருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 7.32 மில்லியன் செலவிடப்பட்டு யூனானி மருந்து வகை கொள்வனவு செய்தல், ரூபா 1.51 மில்லியன் செலவிடப்பட்டு உலர்ந்த திராட்சை 2,230 கிலோ கிராம் கொள்வனவு செய்தல், ரூபா 168,000 செலவிடப்பட்டு தேன் மெழுகு 200 கிலோ கிராம் கொள்வனவு செய்தல், ரூபா 1.99 மில்லியன் செலவிடப்பட்டு சுத்திகரிக்கப்படாத குகுல் 1500 கிலோகிராம் கொள்வனவு செய்தல் ஆகிய விடயங்கள் தொடர்பாக அமைச்சினால் நடாத்தப்பட்ட ஆரம்ப விசாரனை அறிக்கை 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருந்த போதிலும், அது தொடர்பாக அமைச்சின் விசாரணைக் குழுவினால் வழங்கப்பட்டிருந்த தீர்மானங்கள் 2020 திசெம்பர் 31 திகதி வரை செயற்படுத்தியிருக்கவில்லை. | 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரையான காலப் பகுதியினுள் கொள்வனவு செய்தல் தொடர்பாக நடைபெற்றிருந்த முறைகேடுகள் தொடர்பாக முன்னைய திட்டமிடல் முகாமையாளருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கு தயாரானதுடன், அவர் பதவி விளகியதன் காரணமான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு முறைப்பாடு செய்யப்பட்டு ஏற்பட்டிருந்த நட்டத்தை சட்டரீதியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பரிந்துரையின் படி சட்ட நடவடிக்கை எடுக்க | அமைச்சின் விசாரணைக் குழுவினால் வழங்கியிருந்த தீர்மானங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | முடியாமையால் வரிசை அமைச்சின் சட்ட உத்தியோகத்தர் ஊடாக இந்த நட்டத்தை அறவீடு செய்தவற்கு சிவில் வழக்கொன்று தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | |

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 164.65 மில்லியன் பொதுத்துறைக் கடனை அறவீடு செய்வதில் மெதுவாக மற்றும் பலவீன நிலைமை காணப்பட்டது. | 2019 ஆண்டிற்கான பொதுத் துறையில் இருந்து பெறப்பட வேண்டிய தொகை அனைத்தும் அறவிடப்பட்டுள்ளன என. | முன்னைய ஆண்டுகளுக்கான பொதுத்துறை கடன்களையும் அறவீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | நடமாடும் விற்பனை தொடர்பாக கடன் நிபந்தனைகளுக்கு முரணாக கடன் விற்பனை மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 திகதி வரை தீர்க்கப்படாது இருந்த மொத்த கடன் மீதி ரூபா 11.45 மில்லியன் தொகை ஆகும். | கடனுக்கு மேற்கொள்ளப்படும் விற்பனைகள் பலவீனப்படுத்தல் மற்றும் கடன் நிபந்தனைகளுக்கு முரணாக மேற்கொள்ளப்படும் விற்பனைகளை தவிர்ப்பதற்காக 2020 ஆண்டின் போது கடன் நிபந்தனைகளை நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளன என. | அனைத்து கடன்களையும் அறவீடு செய்தல் மற்றும் நடமாடும் விற்பனை தொடர்பாக கடன் நிபந்தனைகளை பொருத்தமான முறையில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 செயற்பாட்டுத் திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1969 மே 11 திகதிய 14859/03 இலக்கங் கொண்ட இலங்கை அரசாங்க அதிவிஷேட வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுத்தாபனத்தின் 07 குறிக்கோள்களில் ஆயுர்வேத மருந்து வகை உற்பத்தி செய்வதற்கு தேவையான சுத்தமான பசு நெய் உற்பத்தி செய்வதற்காக பால் பண்ணைகள் நடாத்திச் செல்லல், மருந்து வகைகள் தயாரிப்பதற்கு தேவையான தேன் உற்பத்தி செய்தல் மற்றும் தேனி வளர்ப்புக்கான வீட்டுக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்தல் அல்லது அதற்காக மாற்று வழிமுறைகளை கடைபிடித்தல் ஆகிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மாட்டுப் பட்டி நடாத்துவதற்காக பொருத்தமான காலநிலையின் கீழ் போதியளவு இடம்பாட்டுடனான காணிகள் மற்றும் பொருத்தமான உணவு வகைகள் எளிதில் பெற்றுக்கொள்ள முடியாமை, உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் பற்றாக்குறை, குளிர் அறை வசதிகள், பொருத்தமான சுற்றுச் சுழல் மற்றும் தேவையான வசதிகள் இன்மை ஆகிய செய்முறைசார் விடயங்கள் காரணமாக அந்த குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனது என.<br>தேனி வளர்ப்புக்காக தற்போது சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் செயற்திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்படுகின்றன என.<br>தேனி வளர்ப்புப் பெட்டிகள் மற்றும் ஏனைய தேவையான ஆலோசனைகள் விவசாயத் | கூட்டுத்தாபனத்தின் பிரதான குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அல்லது முறைசார் விதமாக குறிக்கோள்களை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. மற்றும் 2017 ஆண்டின் போது சேர்க்கப்பட்டிருந்த விவசாய உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் அவ்விடயங்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | |
| (ஆ) | கூட்டுத்தாபனத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த உற்பத்தித் திட்டம் மற்றும் விற்பனைத் திட்டத்தின் படி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என மதிப்பீடு செய்வதற்காக செயலாற்றல் சுட்டிகள் நிறுவப்பட்டு அக் கருமங்களின் செயலாற்றலை மீளாய்வு செய்திருக்கவில்லை. | உற்பத்தித் திட்டம் மற்றும் விற்பனைத் திட்டத்தின் படி மற்றும் விற்பனைப் பிரிவின் செயலாற்றல் இலக்கு பல வருட காலமாக திருத்தங்களுடன் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றது என. ஏனைய பிரிவுகளுக்காக செயலாற்றல் சுட்டிகளை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. மற்றும் அதற்காக உற்பத்தித் திறன் செயலகத்துடன் இணைந்து செயல்படுகின்றன என. | கூட்டுத்தாபனத்தின் ஒவ்வொரு பிரிவின் செயற்பாடுகளின் செயலாற்றல்களை மதிப்பீடு செய்வதற்காக சுட்டிகள் நிறுவப்பட்டு அக் கருமங்களின் செயலாற்றல் மீளாய்வு செய்யப்பட வேண்டும். |
| (இ) | உற்பத்திக் கிரயக் கட்டுப்பாடு மற்றும் தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக முகாமைத்துவ கணக்கு முறைமை ஒன்று அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் உற்பத்தி அலுவல்கள் மற்றும் கிரய கட்டுப்பாடு முறைப்பிரகாரம் மேற்கொள்ளப்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. அதேபோல், உற்பத்திச் செயற்பாடு மற்றும் கலஞ்சியக் கட்டுப்பாடு தொடர்பாக முறையான வழிமுறைகள் அறிமுகப்படுத்தி இருக்காமையினால் இருப்புப் பற்றாக்குறைகள் ஏற்பட்டிருத்தல் மற்றும் மொத்தக் கலஞ்சியங்களில் இருப்பு மட்டங்களில் கணிசமான முரண்கள் ஏற்பட்டிருத்தல் ஆகிய விடயங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் படி இனங்காணப்பட்ட இருப்புப் பற்றாக்குறைகளின் சந்தைப் பெறுமதி ரூபா 2.60 மில்லியன் தொகையாகும். | திட்டமிடல் பிரிவினால் உற்பத்தியை திட்டம், உண்மையான உற்பத்தி அறிக்கைகள், செயலாற்றல் மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் பதிவேடுகள் தயாரிக்கும் போது கணினி தரவு முறையையில் காணப்படும் தகவல்கள் பயன்படுத்தப்படுகின்றது என, அந்தத் தகவல்களை பயன்படுத்தி பிரிவுகளின் அலுவல்கள் நடாத்தப்படுவதினால் மற்றும் உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பாக அனைத்து அலுவல்களும் கணினி தரவு முறைமை ஊடாக மேற்கொள்ளப்படு வதனால் அத் தகவல்கள் சரியான தகவல்கள் என கணிக்கப்படுகின்றது என, அதனால் மருந்து களஞ்சியங்களுக்கு உரிய தகவல்கள் சரியாக கணினி மயப்படுத்தல் களஞ்சியத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர்களின் பொறுப்பு மற்றும் பொறுப்புக் கூறல் ஆகும் என தற்போது உற்பத்திகளை பொதியிடல் மற்றும் போத்தல்களை நிரப்புதல் பிரிவில் இருந்து களஞ்சியங்களுக்கு வழங்கப்படுகின்ற உற்பத்திகளின் எண்ணிக்கை சரியாக வைத்தியர்களின் மேற்பார்வையின் கீழ் வழங்குவதற்கு கணினி தர முறைமையினால் வழங்கப்படும் உற்பத்தி பெறுவனவு பத்திரம் அச் சந்தர்ப்பத்திலேயே வழங்குவதற்கு குறிப்பிட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என | உற்பத்தித் திட்டத்தின் முன்னேற்றம், உற்பத்திப் பிரிவில் காணப்பட வேண்டிய உற்பத்தி வேலைப் பத்திரத்திரங்களின் படி தயாரிக்கப்பட வேண்டும். இதற்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை முறைசார் விதமாக நிறுவப்பட வேண்டும். இந்த குறைபாடு தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டு நிதிப் பிரமாணங்கள் மற்றும் தாபனக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மற்றும் எதிர்காலத்தில் போத்தல் பிரிவிற்கு கணினி சார் பக்கேஜ் ஒன்று அறிமுகப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என

(ஈ) கூட்டுத்தாபனத்தினால் மீளாய்வாண்டின் போது புதிய உற்பத்தி அல்லாத 13 வகையான மருந்துத் தொகுதிகள் மற்றும் 38 வகையான புதிய உற்பத்திகளின் கீழ் 1,888,376 உற்பத்தி அலகுகள் உற்பத்தி செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான உற்பத்தி 1,422,366 அலகுகளாக இருந்தது. அதன்படி எதிர்பார்த்த வருடாந்த உற்பத்தி அலகுகள் 466,504 இனால் நெருங்குவதற்கு முடியாமல் போய் இருந்தது. அதே போல் தனியார் துறையிடம் எதிர்பார்த்த வருமானத்தை நெருங்க முடியாதிருந்த வருமானம் ரூபா 71.14 மில்லியன் அதாவது 33 சதவீமாகக் காணப்பட்டது. மேலும் மீளாய்வாண்டின் போது அரச துறைக்கு 108 உற்பத்தி வகைகளுக்குரிய கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாமையின் காரணத்தினால் கூட்டுத்தாபனம் இழந்துள்ள வருமானம் ரூபா 58.80 மில்லியன் தொகையாகும். சந்தைப்படுத்தலை மேம்படுத்தல் முயற்சி ஒன்று காணப்படாமல் அரச துறையில் இருந்து கிடைக்கக் கூடிய இந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு முடியாமையின் மூலம் சந்தையின் பங்கு கைவிடுபட்டு செல்லக்கூடிய ஆபத்து நிலை ஒன்று காணப்பட்டது. மேலும் நிறுவனத்தினால் தமது சந்தையின் பங்கினைத் தீர்மானிப்பதற்காக காலரீதியாக சந்தை கணிப்பீடு ஒன்று மேற்கொண்டிருக்காததுடன் போட்டி நிறுவனங்களின் இடையே நிறுவனத்தின் சந்தையின் பங்கு குறைவடைதல் ஒன்று அல்லது அதிகரித்தல் ஒன்று ஏற்பட்டிருக்கின்றதா என்பது தொடர்பாக புரிந்துணர்வொன்று நிறுவனத்திடம் காணப்படவில்லை.

மூலப்பொருட்கள் பெற்றுக் கொள்வதில் ஏற்பட்டிருந்த வசதியீனங்கள், சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு இயந்திர உபகரணங்களில் மேற்கொள்ளப்படும் திருத்த வேலைகள், ஆண்டின் போது ஏற்பட்டிருந்த மாதாந்த விற்பனை கோரிக்கை முறையில் மாற்றங்கள் போன்ற காரணங்களினால் திட்டமிடப்பட்ட உற்பத்தியை 100 சதவீதம் வரை நெருங்குவதற்கு முடியாமல் போனது என, இழந்த வருமானத்தை மீண்டும் உயர்த்துவதற்காக உற்பத்தி மற்றும் தேவையான மூலப் பொருட்களை இனங் காணப்பதற்கு, குறிப்பிட்ட பிரிவுகளிடையே முறையான தொடர்பொன்றினை ஏற்படுத்தி சந்தைப்படுத்தல் திட்டம், உற்பத்தித் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டம் என்பன முன்கூட்டியே தயாரித்து சிக்கல்களை இனங்கண்டு அதற்காக பரிகாரம் வழங்குவதன் மூலம் சந்தை கேள்விக்கு ஏற்ற வழங்கள் மேற்கொள்வதற்காக மற்றும் அது தொடர்பாக உரிய பிரிவுகளை அறிவுறுத்துவதற்கு உயர் மட்ட முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது என மற்றும் சந்தையின் பங்கினை இனங்காண்பதற்காக கணிப்பீடொன்று எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படும் என.

நடைமுறைச் சாத்தியமாக நெருங்கக் கூடிய இலக்குகளை வழங்குவதற்கு, மூலப் பொருள் பற்றாக் குறைக்கு நிரந்தரத் தீர்வு கண்டுபிடிப்பதற்கும் மற்றும் உற்பத்திப் பிரிவின் மனிதவள மற்றும் பௌதீக வளங்களை சிறந்த முறையில் முகாமைத்துவப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதன் மூலம் இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டும். அதே போல் தத்வரூபமான மதிப்பீடுகள் தயாரிப்பதற்கும், எதிர்பார்த்த விற்பனை வருமானத்தை நெருங்குவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விற்பனை மேம்பாட்டு முயற்சிகள் இன்றி பூர்த்தி செய்து கொள்ளக் கூடிய அரசத் துறை நிரந்தர சந்தையின் பங்கினை பாதுகாத்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பணிப்பாளர் சபையின் திறைசேரிப் பிரதிநிதி, அரச தொழில் முயற்சித் திணைக்களம் மற்றும் முகாமைத்துவச் சேவை திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த எதிர்புகளை கவனத்தில் எடுக்காமல் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு கூட்டுத்தாபனத்தின் 50 ஆவது வருட விழாவிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2.55 மில்லியன் தொகை பதவியணியினருக்கு நன்கொடை வவுசர்களுக்காக கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | இந்த திட்டத்திற்கு திறைச் சேரியின் பிரதிநிதி மற்றும் அமைச்சினை பிரதிநிதிப்படுத்தும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் இணங்குவதில்லை என கூறிய போதிலும் ஊழியர்களுக்கு வெகுமதி ஒன்று வழங்குவது தொடர்பாக தமது எதிர்ப்பு இல்லை என அவர்களினால் மேலும் குறிப்பிடப்பட்டிருந்தது என இதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது என அனைத்து ஆண்டுகளிலும் சிங்கள மற்றும் இந்து புது வருடத்திற்காக அனைத்து ஊழியர்களுக்கும் பணிப்பாளர் சபை அங்கீகாரத்துடன் நன்கொடை வவுசர்கள் சீட்டுக்கள் வழங்கப்பட்டன என. | நிறுவனத்தின் நிதி நிலைமை மற்றும் செயற்பாட்டு அலுவல்களின் உற்பத்தித் திறன் என்பவற்றை கவனத்தில் எடுத்து முறையான அங்கீகாரத்தை பெற்ற பின்னர் மாத்திரம் இவ்வாறான கொடுப்பனவுகள் மேற்கொள்ள பொறுப்பாக இருக்க வேண்டும். |

## 3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 5½ ஏக்கர்களைக் கொண்ட மதவாச்சி மூலிகைத் தோட்டம் பாரிய அளவில் காடுகள் வளர்ந்து காணப்பட்டதுடன், பராமரிப்பு அலுவல்களுக்காக ஒரு ஊழியர் மட்டும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. பயிர்செய்கை வளவில் ஓய்வுகூடம் ஒன்று மற்றும் உபகரணங்களை வைப்பதற்காக நிரந்தர கட்டிட வசதிகள் அல்லது நீர் பெறுக் கொள்வதற்கு நிரந்தர செய்முறை ஒன்று ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. முறையான பராமரிப்பு மற்றும் உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்படாமை ஆகிய காரணங்களினால் மூலிகைத் தோட்டத்தை உற்பத்தி திறனுடன் பயன்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது. | தற்போது மூலிகைத் தோட்டத்திற்காக மின்சக்தி பெறுக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மூலிகைத் தோட்டத்தில் தோண்டப்பட்டிருந்த குழாய் கிணறுக்காக நீர்ப் பம்ப் ஒன்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மூலிகைத் தோட்டத்துக்கு தேவையான 5000 லீற்றர் கொள்ளளவு உடைய 02 நீர்த் தொட்டிகள் கொள்வனவு செய்து பொருத்தப்பட்டிருந்ததுடன் தற்போது 02 தொழிலாளர்களினால் குறிப்பிட்ட காணியில் காடுகளை அழிக்கும் அலுவல்கள் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் புதிய பயிர்செய்கைகள் மேற் கொள்ளப்பட்டு இருக்கின்றன என. | மூலிகைத் தோட்டத்தை உற்பத்தித் திறனுடன் ஆக்கபூர்வமாக மற்றும் விரைவாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | விஜேராம விற்பனை நிலையத்திற்காக 3 மாடிகளைக் கொண்ட 3,500 சதுர அடி கட்டிடம் ஒன்று 1996 ஆண்டு முதல் கூட்டுத்தாபனத்தினால் வாடகை அடிப்படையில் பெற்றிருந்த போதிலும் கட்டிடத்தின் தரை மாடி மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. முதலாவது மற்றும் இரண்டாவது மாடிகள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படாமல் சிதைவடைந்த பொருட்கள் குவிக்கப்பட்டு சுத்தமற்ற நிலைமையில் காணப்பட்டது. அதன் படி 1996 ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 வரையான காலப் பகுதியில் இந்தக் கட்டிடத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்த வாடகைத் தொகை ரூபா 18,795,000 தொகையில் ரூபா 12,530,000 பயனற்ற செலவொன்றாகியிருந்தது. | தற்போது சேதமடைந்த பொருட்கள் அகற்றப்பட்டிருந்ததுடன் விற்பனை நிலையத்தை திருத்த வேலை மேற்கொண்டு தருமாறு கட்டிட உரிமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பயன்படுத்தப்படாமல் காணப்படும் மேல் மாடிகளுக்காக ஏதேனும் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு பயன்தரு முறையில் பயன்படுத்துவதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என, 2019 ஆண்டின் போது விற்பனை வருமானம் பலவகைப்படுத்தல் கருதுபொருள் அடிப்படையில் இலைக்கஞ்சி வழங்குவது 03 மாதங்கள் நடைபெற்ற போதிலும் அதிலிருந்து கிடைக்கும் வருமானம் போதியளவாகக் காணப்படாமையால் அதனை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது என. | கட்டிடம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தக் கூடிய விதமாக முறைசார் வேலைத் திட்டம் ஒன்று விரைவாக நிறுவி செயற்பட வேண்டும். |
| (இ) | காலி மற்றும் மாத்தறை விற்பனை நிலையங்கள் நடாத்தப்படுகின்ற கட்டிடங்கள் வாடகை அடிப்படையில் பெற்றிருந்ததுடன் இரண்டு கட்டிடங்களினதும் மேல் மாடிகள் விளைவற்றுக் காணப்பட்டது. | காலி விற்பனை நிலையத்தின் மேல் மாடியில் மருத்துவ சிகிச்சை அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு தற்போது உரிய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என. | கட்டிடம் பயன்தரு வகையில் பயன்படுத்தக் கூடிய விதமாக முறைசார் வேலைத் திட்டம் ஒன்று விரைவாக நிறுவி செயற்படுத்த வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பதிரகொட புதிய உற்பத்தி நிலையத்தின் இரண்டு மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கும் ஒப்பந்த வேலைகள் மொத்த ஒப்பந்த வேலைப் பெறுமதி ரூபா 36.86 மில்லியன் தொகைக்கு மீளாய்வாண்டின் போது ஒப்பந்த வேலை கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 திசெம்பர் 31 திகதி வரை ரூபா 11.62 மில்லியன் தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. மேற் கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக விரிவான சிட்டை தயாரித்திருக்காததுடன், மேற் கொள்ளப்பட்ட வேலைகள் தொடர்பாக பரிந்துரை ஒன்றின்றி கொடுப்பனவு | புதிய இரு மாடிக் கட்டிடத்தின் முதலாம் மாடியின் உயரம் அதன் தரை மட்டத்தில் இருந்து 11 அடி உயரத்தில் கட்டிடம் வடிவமைக்கப்பட வேண்டுமென இந்த செயற்திட்டத்திற்காக உசாத்துணைச் சேவை வழங்கும் இலங்கை பொறியியல் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் தவறுதலாக 9½ அடி என கணித்து வரைபுகள் தயாரிக்கப்பட்டிருந்தன என இலங்கை பொறியியல் கூட்டுத்தாபன பொறியியலாளர்கள் வேலைத் தளத்தில் பரிசோதனை மேற்கொண்டு கட்டிடத்தின் | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2020 செப்தெம்பர் 04 திகதி அளவில் நிர்மாண வேலைகள் இடைநிறுத்தப்பட்டு வேலைத் தளம் செயற்படாமல் காணப்பட்டது. அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 7.7 இன் பிரகாரம் ஒப்பந்தக் கம்பனியின் தகைமைகள் மற்றும் அனுபவங்கள் தொடர்பாக மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நம்பத்தகாத விகிதங்கள் (Unrealistic Rates) தொடர்பாக அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 7.9.11 பிரகாரம் விளக்கங்கள் பெற்றுக் கொள்ளாமல் ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்டிருந்தது. | முதலாம் மாடியின் உயரத்தை 450mm களினால் அதிகரிப்பதற்காக ஒப்பந்தக்காரரினால் கோரப்பட்டிருந்த மேலதிகக் கட்டணம் ஆகிய ரூபா 240,317 இற்காக (Variation Cost) பெறுமதிக்குரிய மேலதிக வேலைப் பகுதிக்காக இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனம் பரிந்துரைத்திருந்தது என இந்த மேலதிக கட்டணத்தை அங்கீகரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என, மற்றும் எதிர்காலத்தில் செயற்திட்டத்தின் வேலைகள் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டும் என. | |

### 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அங்கீகரிப்பட்டுள்ள ஆளணிக் கோப்பை மிகைத்து 19 பதவிகளில் பதில் கடமையாற்றுவதற்காக அந்த பதவிகளுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத 19 உத்தியோகத்தர்கள் 2015 ஆண்டு முதல் 2019 ஆண்டு காலப் பகுதியில் சேர்க்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மாத்திரம் ரூபா 2.12 மில்லியன் தொகை பதில் கடமை கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | பாதுகாப்பு வழிகாட்டி உத்தியோகத்தர் பதவி அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக் கோப்பில் காணப்படாததுடன் பணிப்பாளர் சபையின் ஆலோசனையின் படி பல தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் இருந்து பாதுகாப்புச் சேவைக்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டுள்ளன என. | அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக் கோப்பில் காணப்படாத பதவிகளுக்காக முறையான அங்கீகாரம் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்த ஆட்சேர்ப்புக்கள் மற்றும் சம்பளக் கொடுப்பனவு தொடர்பாக பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோளை நெருங்குவதற்காக நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ள வேண்டிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை பெற்றுக் கொள்வதற்காக காணப்படும் இடைவெளிகள் போலவே முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக பொருத்தமான சுட்டிகள் இனங்காணப்பட வேண்டியதுடன், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான சுட்டிகளை இனங்கண்டு குறிக்கோள்களை நெருங்கியிருந்த அளவு மற்றும் விலகல்கள் போலவே கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள் பல்வேறு துறைகளில் இருந்து இனங்கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குதல் தொடர்பான இலக்குகள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அதற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2020 ஜூன் 30 திகதிக்கு முன்னர் செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் கொரோனா தொற்றுநோய் காரணமாக அந்த அலுவல்களில் எதிர்பார்த்த முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ள முடியாமல் போனது. | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குதல் தொடர்பான இலக்கு, சுட்டிகளை இனங்காண்பதற்கு மற்றும் முன்னேற்றத்தை அளவை செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |